உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவம்

இது

## சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம்

எனப் பெயரிய

## சைவ மஹா சபையின்

மாதாந்தப் பத்திரிகை.


| மலர் | | இதழ் |
|---|---|---|
| 9 | உருத்ரோத்காரி ௵ ஆனி, ஆடி மீ<br>1923 ௵ ஜூன், ஜூலை மீ | 3, 4 |



| உள்ளுறை | பக்கம். |
|---|---|
| சமணர் கழுவேறியது ... ... ... | 57 |
| மாயோற்ஞத்தி ... ... ... | 65 |
| இக்காலத்து ஆலயவழிபாடு ... ... ... | 70 |
| சன்மார்க்கம் ... ... ... | 73 |


இஃது

தேவகோட்டை

ஸ்ரீமான் மெ. அரு. நா. இராமநாதன் செட்டியாரவர்களுக்குச்

சமர்ப்பிக்கப்பெறுவது.

---


பத்திரிகாசிரியர் :

இருக்கம் - ஆதிமூல முதலியார்,

(Retired Accountant, Military Accts., Department)

நெ. 43, பாளையப்பன் வீதி, ஏழுகிணறு, சென்னை.


---


சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை.

1923.

தபாற்கூலி உட்பட வருடச்சந்தா ரூபா ஒன்றரை.

# பித்தவாயு லேக்கியம்

நெய் முதலிய பொருள்களின் விலையேற்றத்தையும் இதைச் சித்தப்படுத்துவதனால் நேரிடும் அதிக பிரயாசையையும் நோக்கி இடையில் சிலகாலமாக இந்த லேக்கிய விற்பனை நிறுத்தி வைக்கப் பட்டது. இதனையுண்டு குணமடையப் பெற்றவர்கள் பலர் அடிக்கடி வேண்டிக் கொள்வதனால் இது மறுபடியும் விற்பனைக்குச் சித்தம் செய்யப்பட்டிருக்கிறது. இதை உபயோகித்து வருபவர்களுக்குப் பித்தவாயுவால் உண்டாகும் எவ்வகைப்பட்ட நோய்களும் அணுகா. ஜீரணசக்தி உண்டாம். சரீர புஷ்டியும் பலமும் உண்டாகும். இதுவே உண்மையான தாதுபுஷ்டி மருந்துமாம். வாய்க்கு ருசியாகவும் இருக்கும். பத்தியம் கட்டாயமல்ல. இச்சாபத்தியமிருந்தால் பின்னும் உத்தமம். சிறு பிள்ளைகள் சாப்பிட்டு வந்தால் அடிக்கடி வைத்தியரிடம் போக நேரிடாது. 20 வேளை சாப்பிடக்கூடிய மருந்தின் விலை ரூபா 2. வி. பி. தபாலில் அனுப்பினால் ரூபா 2—4—0.

இலங்கையில் இங்கிருந்து போகும் மருந்துக்கு அதிக வரி விதிப்பதனால் மணியார்டர் மூலமாக முன்பணம் அனுப்புவோர்களுக்கு மாத்திரம் இலங்கைக்கு இந்த லேகியம் அனுப்பப் படும்.

இ. கண்ணப்ப முதலியார்,
நெ. 43, பாளையப்பன் வீதி,
சென்னை.

---

# அறிவிப்பு

ஸ்ரீ அப்பய தீக்ஷிதர் அவர்களால் செய்யப் பெற்ற சிவார்ச்சனா சந்திரிகையும் அகோர சிவாசாரியரால் வியாக்யானம் செய்யப்பெற்ற அஷ்டப் பிரகரணத்துள் தத்துவ பிரகாசிகை, தத்துவசங்கிரகம், தத்துவத்திரய நிர்ணயம், ஆகிய மூன்றும் அடங்கிய புத்தகம் ஒன்றும் நம்முடைய சங்கத்தினின்றும் வெளியா யிருக்கின்றன. வேண்டுவோர் நமக்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

| | | | |
|---|---|---|---|
| சிவார்ச்சனா சந்திரிகை | .... | ... | ரூ. 1 0 0 |
| தத்துவப் பிரகாசிகை, தத்துவ சங்கிரகம், தத்துவநிர்ணயம் ஆகிய மூன்றும் | ... | ... | „ 1 0 0 |

தபாற்சார்ஜ் வேறு

இங்ஙனம்:
காரியதரிசி,
சிவாகமசங்கம், தேவகோட்டை.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சைவம்


| மலர் 9 | உருத்ரோத்காரிவருஷ ஆனி, ஆடிமீ 1923வருஷ சூன், சூலைமீ | இதழ் 3, 4 |
| --- | --- | --- |


### திருக்குறுந்தொகை

வைத்த மாடு மனைவியு மக்கணீர்
செத்த போது செறியார் பிறிவதே
நித்த நீலக் குடியா னைக்கினை
சித்த மாகிற் சிவகதி சேர்திரே

## சமணர் கழுவேறியது

நம்மவர்களால் மிலேச்சர்களென்று கருதப்படும் கிறிஸ்தவர் முதலாயினுர் சிலர், தாங்கள் இரக்கமின்றி உயிர்களைக் கொன்றுதின்று உடலோம்புவோரா யிருந்தும், சீவகாருணிய ஒழுக்கத்தை முத்திநெறிக்கு இன்றியமையாத பரம சாதனமாகக் கைக்கொண்டொழுகும் சைவ சமயிகளாகிய நம்மவர்களைக் கருணையில்லாதவர்களென்று நிந்திக்கிருர்கள். கிறிஸ்தவர்கள் தாங்கள் பிற சமயத்தினருக்குத் துன்பஞ் செய்தலில்லையெனவும், சைவரும் வைணவரும், இந்துக்களும் மகம்மதியரும் அடிக்கடி மதச்சண்டை யிட்டுக் கொள்ளுகிருர்கள் என்றும், முன்னொரு காலத்தில் சைவசமயாசாரியராகிய திருஞான சம்பந்தசுவாமிகள் சிறிதும் இரக்கமின்றி அளவற்ற சமணரைக் கழுவிலேற்றிக் கொன்றனர் என்றும் குறைகூறுகின்றுர்கள். சைவ சமயிகளுள்ளும் சைவசமய நூல்களை ஆராய்ந்தறியாதார் பலர் தங்களைச் சமரச சன்மார்க்க ஞானிகளென்றும் சீவகாருண்ணியப் பழங்களெனவும் எண்ணிக்கொண்டு, சமயபேதம் பாராட்டுவது மதியீனமென்றும், தங்களுக்கு எம்மதமும் சம்மதமே யென்றும், திருஞான சம்பந்த சுவாமிகள் இரக்கமின்றிச் சமணரைக் கழுவிலேற்றினுரென்றும், அவர் அவ்வாறு செய்தமை சைவ சமயிகளிடத்தில் சமயப்

பொறுமையின்மையைக் காட்டுகிறதென்றும் கூறிச் சைவ சமயிகளைப் பழிக்கிறார்கள்.

முற்காலத்துச் சரித்திரங்களை நன்காராய்வார்க்குச் சைவ சமயிகள் எக்காலத்தும் எச்சமயத்தாரையும் துன்புறுத்தினரல்லர் என்பது புலனும். பொதுவாக நமது பரத கண்டத்திலுள்ள எந்த வைதிக சமயத்தாருமே பிற சமயத்தினரைத் துன்புறுத்தியதின்று. சமணர் முதலிய அவைதிக சமயத்தினரே இத்தேசத்து வைதிக சமயிகளுக்குத் துன்பம் விளைத்தார்கள். பிற தேசங்களில் நேரிட்ட சமயப் போர்களில் துன்புற்றுத் தம்மிடம் அடைக்கலம் புகுந்த பிற சமயிகளுக்கெல்லாம் இத்தேசத்து வைதிக சமயிகள் இடம் கொடுத்து அவர்களைக் காப்பாற்றினர்களென்பது இத்தேசத்துச் சரித்திரங்களால் விளங்கும்.

அன்றியும், இத்தேசத்து வைதிக சமயிகள் எவரும் தங்கள் சமயமே முத்தி தரும் மெய்ச் சமயமென்றும் மற்றச் சமயங்களெல்லாம் பயனற்ற பொய்ச் சமயங்களென்றும் சொல்வதில்லை. பின் என் சொல்வரெனில், தங்கள் சமயமே பரமுத்தியைத் தரும் மேலான சமயமென்றும், மற்றைச் சமயங்களெல்லாம் இடையில் பதமுத்தியைத் தந்து இறுதியில் தங்கள் சமயத்திற் செலுத்தும் சோபானங்களாமென்றும் கூறுவரென்க. ஆதலால், இத்தேசத்து வைதிக சமயத்தினரெவரும் பிற சமயிகளைத் துன்பப்படுத்தற்கு ஏதுவில்லை. கிறிஸ்தவர்கள் மகமதியர்கள் புத்தர்கள் முதலாயினோரெல்லாம் தங்கள் சமயமே முத்தி தரும் மெய்ச் சமயமெனவும், ஏனைய சமயங்களெல்லாம் நரகத்தைத் தரும் பொய்ச் சமயங்களெனவும் கூறுவர். அதனால் இவர்கள் பிற சமயிகளை இம்சிப்பது வழக்கமா யிருக்கிறது. கிறிஸ்தவர்கள் முற்காலத்தில் யூதர் முதலாயினருக்கு விளைத்த துன்பங்கள் அளவிடப்படாதன. கிறிஸ்தவர்களுள்ளும், ப்ரோடெஸ்டாண்டு வகுப்பார் ரோமன்கத்தோலிக் வகுப்பாருக்கும், ரோமன்கத்தோலிக் வகுப்பார் ப்ரோடெஸ்டாண்டு வகுப்பாருக்கும் இழைத்த தீமைகள் சொல்லித் தொலையாதன. மகமதியர் இத்தேசத்தார்க்குச் செய்த கொடுமைகள் நிகரற்றன. சமணரும், புத்தரும் தங்களைச் சீவகாருணியத்திற் சிறந்தவரென்று சொல்லிக் கொண்டே செய்த தீமைகளும் அளவிறந்தனவாம். இவ்வாறு சைவ சமயிகள் எக்காலத்தும் எச்சமயத்தார்க்கும் தீங்கிழைத்ததே இல்லை.

ஆனல், சைவரும் வைணவரும் எந்நேரமும் சண்டை யிடுவது பிரத்தியட்சமா யிருக்கவும், சைவ சமயாசாரியராகிய திருஞான சம்

பந்த சுவாமிகள் எண்ணாயிரம் சமணரை ஏக காலத்தில் கழுவிலேற்றிக் கொன்ற சரித்திரம் இருக்கவும் சைவ சமயிகள் மாத்திரம் பிற சமயத்தினரைத் துன்பப் படுத்தாத தூயோர் என்பது எப்படி யொப்பத் தகும் என்று சிலர் கேட்கலாம்.

சைவரும் வைணவரும் செய்யும் சண்டை இறைவனது பரத்துவத்தை விளக்க மூந்தும் ஞானச் சண்டையாமன்றி, மூடத்தனமாகத் தங்கள் மதத்திற்சேர்ந்தால் பிழைக்கலாம் ; இன்றேல் இறக்கவேண்டும். என்று செய்யும் மூர்க்கச் சண்டையன்று. சைவ வைணவர்கள் தம்முள் செய்யும் சமய வாதமாகிய ஞானப்போரை மிலேச்சர்கள் செய்யும் மூர்க்கச் சண்டைகளோடு ஒப்பிடுவது பெரிதும் அவிவேகத்தின்பாலதாம். இத்தகைய போர்கள் மிக மேதாவிகள் கூடியுள்ள இராஜ சபையிலும் நடப்பனவாம். அறிஞர் பலர் குழுமியுள்ள அரசன் அவைக்களத்தில் அபிப்பிராய பேதங்களால் உண்டாகும் விவேகப்போரை அவிவேகள் தம்முள் மாறுபட்டுச் செய்யும் மூர்க்கப்போரோடு ஒப்பிடலாகாது. அதுபோல் சிவபரத்துவத்தை விளக்குமாறு சைவர்கள் செய்யும் ஞானப்போரை அஞ்ஞானப் போர்களோடு ஒப்பிட்டுப் பேசுதல் அவிவேகிகளின் கூற்றும். ஆனால் சமணரைச் சைவர்கள் கழுவிலேற்றியதும் ஞானப்போராமோ வெனில், கூறுவாம்.

சைவர்கள் சமணர்களோடு எக்காலத்தும் சண்டை செய்ததில்லை. சைவர்கள் கூடிவாழும் தேசத்திலேயே புத்த சமயம் தோன்றி எங்கும் பரவிற்றெனினும், சைவர்கள் புத்தர்களோடு போர் செய்தனரெனச் சரித்திரங்களாற் பெறப்படவில்லை. இது வொன்றே சைவ சமயிகளின் உயர் குணத்தை விளக்கும். இத்தகைய உயர் குணம் கிறிஸ்தவர்கள் முதலான மிலேச்ச மதஸ்தரிடையில் இல்லையென்பது அவர்கள் தேச சரித்திரங்களா லறியக்கிடக்கின்றது. புத்தர்கள் தங்கள் சொல் வன்மையால் செல்வாக்குடைய அரசர் முதலாயினரைத் தங்கள் வசப்படுத்திச் சைவர் முதலாயினர்க்கு இடுக்கண் விளைத்தபடியே இருந்தார்கள். அரசனை வசப்படுத்தி வைத்துக்கொண்டு சாந்தகுண நிதியாகவும், நிரபராதியாகவும் இருந்த நமது திருநாவுக்கரசு சுவாமிகளை நீற்றறையிற்றள்ளி ஏழு நாட்கள் வரையில் நெருப்பு வைத்துக் கொளுத்தினர்கள். அதனால் அவர் திருமேனி சிறிதும் வாடாமல், பஸ்மோத்தூளித விக்கிரகமாகவும், கண்கள் ஆனந்த அருவிசொரியவும் அன்புமயமாகவும் வெளி வந்ததை யறிந்தும், அவரை வழிபட்டு உய்வதற்குப் பதிலாக அவருக்கு விஷத்தை யூட்டினர்கள். அதனாலும் அவர் இறவாமையை நோக்கியும் அவரைக் கொல்ல அவர் மீது

மதயானையை யேவினார்கள். அம்மதயானை அவரை வலம் வந்து
வணங்கி ஏவினவர்களைக் கீழே தள்ளி மிதித்தும், காலைப்பிடித்து வாரித்
தரையில் மோதியும் கொன்றது. இத்தனை யற்புதங்களைக் கண்டும்
அவர்கள் அறிவு விளக்கம் உண்டாகப் பெறாது, நமது நாயனாரைக் கற்
றூணில் இறுகக் கட்டிக்கொண்டுபோய் நடுக்கடலில் வீழ்த்தினார்கள்.
புத்தர்கள் அவ்வளவு தீமைகள் செய்தும், நமது திருநாவுக்கரசு நாய
னார் ஒரு திருப்பதிகத்தால் அவர்களைச் சாம்பராக்கி விட்டிருக்கக் கூடு
மாயினும், அவர்களுக்குத் தீங்கு நினைக்கவேயில்லை. "நாமார்க்கும்
குடியல்லோம் நமனையஞ்சோம் நரகத்திலிடர்ப்படோம் நடலையில்
லோம்—ஏமாப்போம் பிணியறியோம் பணிவோமல்லோம் இன்பமே
யெந்நாளுந் துன்பமில்லை—தாமார்க்குங் குடியல்லாத் தன்மையான சங்
கரன் நற்சங்க வெண்குழையோர் காதிற்—கோமாற்கே நாம் என்றும்
மீளா ஆளாய்க் கொய்ம்மலர்ச் சேவடியிணையே குறுகினோமே" என்று
இறைவன் இணையடி நீழலில் இருந்து இறுமாப்புற்றிருந்த ஞானவீர
ருக்குப் புத்த கோசுக்கள் செய்த தீங்குகள் என் செயும்? இவ்வாறே
புத்தர்கள் உத்தமச் சைவர் முதலாயினோருக்குத் தீங்கிழைத்தபடியே
யிருந்தார்கள். தரிசன மாத்திரத்தாலும், தாரண மாத்திரத்தாலும்
சர்வ பாவங்களையும் சாம்பராக்கும் திருநீற்றினைத் தரித்த பெரியோர்
களைக் கண்ட மாத்திரத்தில் தங்களுக்குக் கண்டு முட்டு வந்ததென்
றும், அவர்கள் பேரைக் கேட்ட மாத்திரத்தில் கேட்டு முட்டு வந்த
தென்றும் அவமதித்தார்கள். இவர்கள் செய்த கொடுமைகளைச்
சகிக்கமாட்டாமல் சிவாநுபூதிச் செல்வர்கள் யாவரும் மனம் நொந்து
மறைந்து சிவபத்தி செய்வாராயினர். மதுரையில் பாண்டிமா தேவி
யார் தமது கணவனாகிய கூன்பாண்டியன் சமணர் வலையிற் சிக்குண்
டழிவதையும், அதனால் பாண்டிநாடு பாழ் நாடாவதையும் எண்ணி
எண்ணி யேங்கி மறைந்து சிவபத்தி செய்திருந்தார். சீகாழியில் சிவ
பாத விருதயர் சமணிருள் ஒழித்துச் சிவஞான ஒளிபரப்பும் சிவ
ஞானக் கதிரவன் அவதரிக்கும் நாள் எந்நாளோவென வேங்கித் தவம்
புரிந்திருந்தனர். இவ்வாறு சிவஞானச் செல்வர்கள் செய்த தவமே
யோர் உருக்கொண்டதுபோல் திருஞான சம்பந்த சுவாமிகள் திருவவ
தாரஞ் செய்தருளினார். திருஞான சம்பந்தர் சமணக்காட்டை யழித்
துச் சைவப் பயிரை வளர்த்தற்கே திருவவதாரஞ் செய்தனரெனி
னும் அவர் தாமும் நேரே சமணர்களுக்கு எவ்விதத் தீங்கும் புரிந்த
தில்லை. விட்டிற் பூச்சிகள் ஒன்றுகூடிச் சுவாலித் தெரியும் தீயை
யணைக்கப் புகுந்ததுபோல், சமணர்கள் ஒன்றுகூடித் திருஞான சம்பந்

தப் பெருமானையும் அவர் திருக்கூட்டத் தளவிறந்த அடியவர்களையும் நெருப்பிலிட்டுக் கொளுத்திக் கொன்றுவிட வேண்டி, மதுரையில் அவர் தங்கியிருந்த மடத்தில் தீவைத்தார்கள். அப்போது ஞான சம் பந்தவள்ளல் ஒரு திருப்பாசுரத்தால் சமணப் பூண்டடங்கலும் வெந்து சாம்பராகுமாறு செய்துவிடக் கூடும். ஞானம் எங்கு உண்டோ அங்கே கருணையும் உண்டு. கருணையின்மை அஞ்ஞானத்தின் தன்மை யாம். எமது சம்பந்தப் பெருமான் அருட்சத்தியின் திருமுலைப் பாலுண்டு அருள் மயமாகவும், ஞான மயமாகவும் இருந்தவர். அரு ளும், ஞானமும் பொருந்திய விடமே பேரின்ப வெள்ளம் பொங்கித் ததும்புமிடமாம். ஆதலால் அவர் இன்பமும் துன்பமும் இல்லாத பேரின்பத்திற் றிளைத்திருந்தவர். "கல்லூர்ப் பெருமணம் வேண்டாத கழுமல வித்தகர்". ஆதலால் அவர் சமணர்கள் தமக்குத் தீங்கிழைத் தமையைப் பொருட்படுத்தி அவர்களைத் தண்டிக்க நினைந்திலர். பின் யாது செய்தனரெனில் துட்ட நிக்கிரகமும் சிட்ட பரிபாலனமும் செய்தல் அரசர் கடமையாதலாலும், கூன்பாண்டியன் அக்கடமையைச் செலுத்தத் தவறின னைபடியாலும் அவ்வரசனைத் தண்டித்து அவன் மூலமாக உலகியலை நிறுத்துமாறு திருவுளங்கொண்டு அருட் கொண்ட லாகிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் சமணர் திருமடத்தில் இட்ட தீ மடத்தை விட்டகன்று பாண்டியனைப்பற்றிச் சுரநோயாய் வருத்துமாறு,

செய்யனே திரு வாலவாய் மேவிய
ஐயனே யஞ்ச லென்றருள் செய்யெனை
பொய்யரா மம ணர்கொளு வுஞ்சுடர்
பையவே சென்று பாண்டியற் காகவே.

என்னும் திருப்பதிக மாரி பொழிந்தனர். அதனால் மடத்திலிட்ட தீ யணைந்து சகிக்கொணாத சுரப்பிணியாக மாறிப் பாண்டியனைப் பற்றி யெரிக்கத் தலைப்பட்டது. சமணர்கள் அதனைத் தங்கள் மணிமந்திர ஔடதங்களால் தணிக்க முயன்றனர். அம்முயற்சிகளால் வெப்பு அதிகரித்ததேயன்றி தணியவில்லை. அப்போது பாண்டிமா தேவியார் பாண்டியனை நோக்கி, அப்பிணி திருஞான சம்பந்த சுவாமிகள் எழுந் தருளிய திருமடத்தில் சமணர்கள் தீ மூட்டியதனால் வந்ததெனவும், அப்பெருமானார் எழுந்தருளினால் தீரும் எனவும் அவன் செவிக்கு அமுதொழுக்கிப் பிணி தீர்ப்பார்போல் கூறினார். அக்கற்பரசியின் மதுரமொழியைக் கேட்டபோதே பாண்டியனுக்குப் புத்துயிர் வந்தது போற் காணப்பட்டது. அதனால் அவன் ஞானசம்பந்தரைத் தன்

னிடம் அழைத்து வருதற் கிசைந்தான். உடனே பாண்டிமா தேவி யாரும் மந்திரி குலச்சிறை நாயனாரும் எம்பிரான் சம்பந்தப் பிள்ளை யாரை யடைந்து நிலத்தில் வீழ்ந்து பலமுறை வணங்கி, பாண்டியனுக் குப் பிராணப் பிட்சை கொடுத்து, சைவ சமயம் உலகெங்கும் தழைத் தோங்குமாறு செய்தருளல் வேண்டுமெனப் பிரார்த்தித்தார்கள். எமது சீகாழிச் செல்வர் முத்துச் சிவிகையிலே யூர்ந்து அரசனிடம் சென்ற னர். அரசன் அவரைத் தரிசித்துத் தன் முடியின் பக்கத்தில் அவ ருக்கு இரத்தினாசனமளிக்கப் பணித்து, அவரை வரவேற்றான். அத னைக் கண்ட சமணர்கள் மனம் புழுங்கி அவரை வாதுக்கழைத்தார்கள். அதற்குச் சம்பந்தப் பெருமான் இசைந்தாராயினும், அவர்கள் கிரம மாகவேனும் தனித்தனி யாகவேனும் வாது செய்யாமல், பலர் ஒன்று கூடிக் கூச்சலிட்டு ஆர்ப்பரித்தார்கள். யாவருங் கூடித் திருஞான சம் பந்தப் பிள்ளையாரைக் கொலை செய்யப் போவார் போற் காணப்பட் டார்கள். முன்னே திருஞான சம்பந்தர் பெருமையை முதன் முதல் கேட்ட மாத்திரத்திலேயே அன்பு மேலிட்டுத் தனங்களிற் பால் சுரக் கப் பெற்ற பாண்டிமா தேவியார், சமணர்கள் செய்த ஆரவாரத்தைக் கண்டு பயந்து கண்களில் நீர்சொரிந்து, தன் மணாளனை நோக்கி, "நாய கரே, சுவாமிகள் சிறு பாலர். இச்சமணர்களோ எண்ணில்லாதவர்கள். சுவாமிகள் உம்முடைய நோயை நீக்கியருளுவர். பின்பு இச்சமணர்கள் பேசவல்லவராயிற் பேசக் கடவர்கள்" என்றார். ஞான சம்பந்தப் பெருமான் அவ்வாறு மானிளம்பிணையென மருண்டு நின்று தமக்காகப் பரிந்து கண்டுளிசிந்திய பாண்டிமா தேவியாரை நோக்கி அவ்வம்மை யார் கண்களைச் சிறப்பித்து,

> மானினேர்விழி மாதராய்வழு திக்குமாபெருந் தேவிகேள்
> பானல்வாயொரு பாலனீங்கிவ னென்றுநீபரி வெய்திடேல்
> ஆனைமாமலை யாதியாய விடங்களிற்பல வல்லல்சேர்
> ஈனருக்கெளி யேனலேன்றிரு வாலவாயர னிற்கவே

என்னும் திருப்பதிகம்பாடி அவரைத் தேற்றியருளினர். முன்னமே சுரநோயின் வேகத்தைச் சகிக்கமாட்டாது வருந்திக்கொண்டிருந்த அர சன் சமணரிட்ட கூச்சலைச் சகிக்கமாட்டாமல் அவர்களைப் பார்த்து "நீங்களும் இந்தச் சிவபக்தரும் எந்நோயைத் தீருங்கள். தீர்த்தவர் எவரோ அவரே வாதில் வென்றவர்" என்றான். சமணர்கள் "மகா ராசாவே, உம்முடைய இடப்பாகத்து நோயை நாங்கள் எங்கள் சமய மந்திரத்தால் தீர்ப்போம். இவர் வலப்பாகத்து நோய் தீர்க்கக் கடவர்"

என்றார்கள். அதற்கு அரசன் இசைதலும், அவர்கள் தங்கள் சமய மந்திரங்களைச் சொல்லி அவனுடைய இடது பாகத்தைப் பீலியினாலே தடவினார்கள். அதனால் அவ்வெப்பு பின்னும் அதிகரித்ததேயன்றிக் குறையவில்லை. அரசன் பொறுக்கமாட்டாமல் பிள்ளையாரைப் பார்த்தான். ஞானவாரமுதுண்ட பிள்ளையார் ஆரிய வேதோபநிடதங்கள் விதந்துகூறும் விபூதியின் பெருமையை விளக்கி "மந்திரமாவது நீறு" என்னும் முதலையுடைய திருப்பதிகத்தைப் பாடிக்கொண்டே அவனுடைய வலப்பாகத்தை விபூதிகொண்டு செய்யதாமரை யக விதழினும் மிகச் சிவந்த தமது கைத்தலமலரால் தடவியருளினார். அப்பாகம் உடனே புது நிலாக்காலத்துப் பூம்பொழிற்றடமெனக் குளிர்ந்தது. இடப்பாகத்து நோய் முன்னிலும் இருமடங்கு அதிகரித்தது. அது கண்டு மன்னவன் சமணர்களை நோக்கி "நீங்கள் தோற்றொழிந்தீர்கள். என்னை விட்டு அகலப் போமின்கள்" என்று கூறிப் பிள்ளையார் திருமுகத்தை நோக்கி "அடியேனைப் பொருளாக் கொண்டு உய்வித்த கருணைபங்கடலே, இடப்பாகத்து வெப்பையும் தேவரீரே தீர்த்தருளுக" என்றான். காழி வேந்தர் இடதுபாகத்தையும் விபூதிகொண்டு தடவியருள வெப்புநோய் முற்றிலும் ஒழிந்தது. அதனைக்கண்ட சமணர்கள் "சரீர நோயைத்தணிப்பது அதிசயமன்று. நாங்கள் இருபட்சத்தோரும் எங்கள் எங்கள் சமய உண்மைகளை ஏட்டிலெழுதி அக்கினியிலே யிடக்கடவோம். யாரிட்ட வேடு வேவாது பச்சென்றிருக்குமோ அவர்களே வென்றவர்கள்" என்றார்கள். அதற்கும் சிரபுரச் செல்வர் இசைய, அரசன் கட்டளைப்படி சுவாலித்தெரியும் தீயமைக்கப்பட்டது. அத்தீயில் இருபட்சத்தோரும் தங்கள் தங்கள் சமய உண்மைகளை எழுதிய ஏடுகளை இட்டார்கள். சமணரிட்ட ஏடு அந்தக் கணத்திலேயே வெந்து சாம்பராகியது. சீகாழி வேந்தர் இட்ட ஏடு இட்டபடியே பச்சென்றிருந்தது. அரசன் அதனைக் கண்டு சமணர்களை நோக்கி "நீங்கள் இப்போதும் தோற்றீர்கள்" என்றான். சமணர்கள் "அக்கினித் தம்பனத்தால் அனலில் இட்ட பொருள் வேவாதிருக்கலாம். அன்றியும், இருமுறை தோற்றாலும் மூன்றாமுறையில் நாங்கள் வெற்றியடைவோம். நாங்கள் இருபட்சத்தோரும் எங்கள் எங்கள் சமய உண்மைகளை எழுதிய ஏடுகளை வைகையாற்றிலிட்டால், யாவர் இட்ட ஏடு நீரின் வழியே செல்லாமல் எதிரேறிச் செல்லுமோ அவர்களே வென்றவர்களாவர்" என்றார்கள். அப்போது மந்திரி குலச்சிறை நாயனார் சமணரை நோக்கி "இவ்வாதத்தில் தோற்றவர் தோல்வியின் பயனாகச் செய்வதியாது" என்றனர்.

அதற்குச் சமணர்கள் "நாங்கள் சமணமதத்தை விட்டுச் சைவசமயத்தைச் சார்ந்துய்வோம்" என்று சொல்லுதல் வேண்டும். ஆனால் அவர்கள் அப்படிச் சொல்லவில்லை. அவர்கள் இழைத்த கொடுமைகளின் பொருட்டு அவர்களை அரசன் தண்டித்தல் வேண்டுமென்பது இறைவன் சங்கற்பமா யிருந்தமையாலும், அதுவரையில் அரசன் முதலிய பலரால் வழிபடப் பெற்று உயர்வாக மதிக்கப்பெற்றிருந்த தங்களை இனி மதிப்பாரின்மையால் உயிர் வாழ்தலினும் சாதலே நன்றெனத் துணிந்தமையாலும், பொறாமையாலும், கோபத்தாலும் அறிவிழந்து "நாங்கள் இவ்வாதிலும் தோற்றோமாயின் எங்களை இவ்வரசர் கழுவிலேற்றக் கடவர்" என்றார்கள். பிறகு அரசன் கட்டளையின்படி சமணர்கள் அத்திநாத்தி என்றெழுதிய ஏட்டை வைகை நதியிலிட்டார்கள். அவ்வேடு விரைந்து நீர் சென்ற வழியே கடலை நோக்கிச் சென்றது. அதையறிந்த சமணர்கள் ஞானபோனகரை நோக்கி "நீரும் உம்முடைய ஏட்டை இடும். பார்ப்போம்" என்றார்கள். பிள்ளையார் "வாழ்க வந்தணர்" என்னும் முதலையுடைய திருப்பாசுரத்தை யெழுதி ஆற்றில் விட்டார். அத்திருவேடு நீரைக் கிழித்துக்கொண்டு அதிவேகமாக எதிரேறிச் சென்றது. அதுகண்டும் சமணர்களுக்கு அறிவுவரவில்லை. அதனால் அவர்கள் மானமும் பொறாமையும் மிகுந்து கழுவேறிச் சாக முற்பட்டு நின்றார்கள். ஆதலால் அவர்களை அரசன் கழுவேற்ற நேர்ந்தது.

சமணர்கள் திருநாவுக்கரசு நாயனார் முதலிய சிவஞானச் செல்வர்களுக்கு இழைத்த தீங்குகளைச் சிந்தித்தும், தமது திருக்கூட்டத்தினர் தங்கிய மடத்தில் தீ யிட்டதை நினைந்தும், துட்ட நிக்கிரகமும் சிட்ட பரிபாலனமும் செய்தல் அரசர் கடமை யென்பதைச் சீர்தூக்கியும், திருஞான சம்பந்தப் பெருமானார் அதனை விலக்கவில்லை.

சமணர்கள் அரசன் தங்களுக்குச் சார்பாயிருந்ததனால் திருநாவுக்கரசு நாயனார் முதலிய பெரியோர்களுக்குத் தீங்கு புரிந்ததுபோல் திருஞான சம்பந்த சுவாமிகளுக்கும் தீங்கு புரியத் தொடங்கினார்கள். திருநாவுக்கரசு சுவாமிகள் சமணர்களை வென்றழிக்கக் கூடுமாயினும், சிவபெருமானுக்கு அடிமைத் திறம்பூண்டு ஆட்செய்தவ ராகையால் அவர் யாவும் சிவன் செயல் என்று சிவன் திருவடி நிழலில் அடங்கியிருந்தனரேயன்றி அவர்களை வெல்லவாவது தண்டிக்கவாவது நினைந்திலர். திருஞான சம்பந்தவள்ளலார் பிள்ளைமைத்திறங் கொண்டு இறைவனிடத்தில் அன்பு செய்தவர். பிதாவுக்குரிய செயல்களெல்லாம் பிள்ளைக்கும் உண்டு. ஆயினும் பிதாவின் சொற்படி அச்செயல்களைப் பிள்ளை செய்தல் வேண்டும் என்னும் நீதிபற்றி,

வேத வேள்வியை நிந்தனை செய்துழல்
ஆத மில்லி யமணொடு தேரரை
வாதில் வெல்லத் திரு வுள்ளமே
பாதிமா தொடு மாய பரமனே
ஞாலநின் புகழேமிக வேண்டுந்தென்
ஆலவாயி லுறையுமெம் மாதியே.

என்னும் பதிகமோதி இறைவனார் கட்டளை பெற்றுச் சமணரை வாதில்வென் றழித்தனரேயன்றித் தாமாகவே சமணரைக் கழுவி லேற்றினாரல்லர். திருஞான சம்பந்தப் பெருமான் அத்திருப்பதிகத்தில் இறைவனை நோக்கி "பாதிமாதுடனாய பரமனே (அதாவது அருட்சத்தியாகிய உமாதேவியாரைப் பிரியாது கூடி எல்லாவுயிர்களுக்கும் அம்மையப்பனாயிருந்து பாரபட்சமின்றி ஒக்க நோக்கி அருள் செய்யும் பரம கருணையங்கடலே) அமணரும் தேரரும் தேவரீர் மொழிந்த வேதத்தையும் வேள்வியையும் வைதிக நெறியில் நிற்போரையும் நிந்தித்து மேன்மை பொருந்திய வைதிக சைவ நன்னெறியை யழித்து வருகின்றார்கள். இவர்களை வாதில் வென்றழிக்காவிடில் ஞாலத்தில் நின்புகழ் மறைந்துவிடும். வாதில் வெல்வேனாயின் அரசன் இவர்களைத் தண்டிப்பான். அதனால் சமணர்கள் வருந்த நேரிடும். ஆதலால் சமணர்களை வாதில் வென்றழிப்பது தேவரீரது திருவுள்ளக் குறிப்புத்தானோ" என்று வினவி யருள்பெற்ற பின்பே வாதஞ் செய்யப் போந்தருளினர்.

இவற்றால் சமணர் கழுவேறியதற்குச் சமணர் செய்கைகளே காரணம் என்பது புலனாம்.

பத்திரிகாசிரியர்.

---

## மாயோற்பத்தி

சடப்பிரபஞ்சமாகிய தனு கரண புவன போகங்கள் எல்லாம் தோன்றுதற்கு முதற் காரணமாயுள்ளது மாயை என்பது சைவ சமயக் கொள்கை. இந்த மாயை எங்ஙனம் உளதாயிற்று என்பதை இங்கே ஆராய்வாம்.

சடப்பிரபஞ்சமாகிய தனு கரண புவன போகங்களைக் கடவுள் ஆன்மாக்கள் பொருட்டாக மாயையிலிருந்து சிருட்டித்தார் என்று சைவ சமயம் சாதிக்கும். தனு கரண புவன போகங்கள் எல்லாம் உள் பொருள்களாக, இவற்றிற்கு முதற் காரணமாக வுள்ளதும் உள்பொருளாகவே இருத்தல்வேண்டும். கடவுள் எல்லாம் வல்லவராயினும்,

யாதொரு முதற் காரணமுமின்றி யாதொன்றைச் சிருட்டிக்க வல்லர் என்பது பெறப்படாது முதற்காரணமின்றி யாதொரு பொருளைச் சிருட்டித்தல் அசம்பாவிதம் எனப்படும். கடவுள் அசம்பாவிதத்தினும் வல்லர் எனப்படமாட்டார். பொருள்களின் இயற்கைச் சொரூபத்தை நோக்குமிடத்து, முன்னில்லாதிருந்து பின்னர்த் தோன்றும் பொருள்கள் எல்லாம், முன்னுள்ளதோர் முதற்காரணத்திலிருந்து தோன்றுவதல்லாமல், முதற்காரணம் ஒன்றுமின்றி (அதாவது உபாதானம் சூனியமாக) தோன்றுவது உண்மைக்கு மாறுகக் காணப்படும். உண்மையாவது கடவுளுடைய சொரூபம். இயற்கை அமைதிகளெல்லாம், உண்மையைத் தமக்கு வடிவாகக்கொண்ட கடவுளின் செயல்களாதலால், அந்த இயற்கை அமைதியிற் காணப்படும் உண்மைகள் எல்லாம், கடவுளுடைய வடிவாகிய பரமார்த்த சத்தியங்களாம். இந்தப் பரமார்த்த சத்திய முறைக்கு மாறுக யாதொரு நிகழ்ச்சி நிகழ்வுறுமென்பது கடவுளுடைய சத்திய சொரூபத்தை நிந்தித்தவாறுகும் என்க. அதுமட்டோ! முன்பொருகாலத்து முதற்காரணமின்றி உலகத்தைச் சிருட்டித்த கடவுள், இப்போது சிருட்டிக்கும் சிருட்டிகளை எல்லாம் முதற்காரணம் கொண்டு சிருட்டித்தலால் அவர் விகாரி எனவும் பட்டு, கடவுளிலக்கணத்திற் பிறழ்ந்திடுவர் என்பதும் காண்க.

இன்னமும் காரணத்திலிருந்து தோன்றுவதே காரியம் எனப்படும். உலகம் காரியம் என்பது ஒத்துக்கொள்ளப்படு மிடத்து, அதனுக்கு ஒரு காரணம் வேண்டப்படும் என்பது தானே போந்திடும். பூவின்றி மாலை அமையாமை போலக் காரணமின்றிக் காரியமாகிய உலகம் அமைந்திடமாட்டாது. உலகம் உள்பொருளாதலால், இது பிறிதொரு உள்பொருளிடத் திருந்துதானே தோன்றுதல் வேண்டும்? இங்ஙனம் இல்லையாயின் உள்பொருளாகிய உலகம் இல்பொருளாகிய சூனியத்திலிருந்து தோன்றிற்று என்றபடியாகும். உண்மை இன்மையில் இருந்து தோன்றும் என்பது, அந்த உண்மை இன்மைகளின் சொரூப இலக்கணங்களை நோக்குமிடத்து ஒருவாற்ருனும் கூடாதாதலின் இந்தக் கூடாமையைக் கடவுள் செய்தார் என்பது சிறிதுங்கூடாது.

கடவுள் எல்லாம் வல்லர் என்பதனுல், பொருள்களின் சொரூப இலக்கணங்களை நோக்குமிடத்து, இயலுந் தகுதியுடைய செயல்களையெல்லாம் செய்யவல்லார் என்பதன்றி, இயலுந் தகுதியில்லாத செயல்களையும் அவர் செய்ய வல்லார் என்பது பெறப்படாது. தமது சொரூப இலக்கணங்களை நோக்க இயலுந் தகுதி இல்லாதன இல்பொருள்களேயன்றி, உள்பொருளாகா. "எல்லாம்" என்னும்

பொருட்டொகுதியுள் அடங்குவ அனைத்தும் இயலுந்தகுதியுடைய உள்பொருளையன்றி, அத்தகுதியில்லாத இல்பொருள்களல்ல. அவைகள் பொருள்க ளாகாமையின், பொருட்டொகுதியுள்வைத் தெண்ணப்படமாட்டா. ஆகவே, கடவுள் 'எல்லாம்' வல்லர் என்பதனால், அவர் இல்பொருள்களினும் வல்லார் என்பது பெறப்படாது. இன்மையின் இன்மையே உண்மை யாதலின், கடவுள் தமது சாமர்த்தியம் பற்றி இன்மையை உண்மையாக்க மாட்டார். அங்ஙனம் ஆக்க வல்லார் என்பது அவர் பொய்யையும் மெய்யாக்க வல்லர் என்பது போலும் ஓர் ஆபாசமாம்.

ஒரு பொருளை ஆக்குதற்கு முதற்காரணம் வேண்டப்படுவது சிற்றறிவும் சிறு தொழிலுமுடைய நம்போலியர்க்கன்றி, முற்றறிவும் முற்றுத்தொழி லு முடைய கடவுளுக்கன்றே எனவும் சிலர் வாதிப்பர். இவர்கள் செயல் நிகழ்ச்சிகளின் இயலுந் தகுதி இயலாத் தகுதிகளை இருதிறத்தின் வைத்து ஆராய்தல் வேண்டும். ஒரு செயல் நிகழ்ச்சியியலாமைக் கிருகாரணங்களுள. ஒன்று அந்தச் செயலின் சொரூப இலக்கணம்பற்றிய வியலாமை; மற்றையது அச்செயல் நிகழ்ச்சிக்கு வேண்டப்படும் சத்தி இன்மைபற்றிய இயலாமை. யாதொரு செயலின் சொரூப இலக்கணம் பற்றிய இயலாமை எல்லார்க்கும் பொது வாயது. அந்தச் செயலைச் செய்தல் ஒருவராலும் இயலாது. அதாவது ஒன்றையும் இரண்டையும் கூட்டுவதால் ஒன்றுமின்மையாகிய சூனியத்தைப் பிறப்பித்தல் போன்ற வியலாமை. இந்தச் செயல் கடவுளாலும் இயலாது. இது ஒன்றும் இரண்டுமாகிய உண்மைப் பொருள்களின் இலக்கணத்தையும், ஒன்று மின்மையாகிய சூனியப் பொருளின் இலக்கணத்தையும், ஒன்றையும் இரண்டையும் கூட்டுதலாகிய செயலின் இலக்கணத்தையும் நோக்குமிடத்து ஒருவாற்றானும் இயலாதது. இந்த வியலாமை யாதொரு சத்திக்குறைவால் எய்துவதல்ல. இந்த வியலாமையைக் கடவுள் செய்யாமைபற்றி அவர் அசத்தர் எனப்பட்டுவிடமாட்டார்.

இனி, சத்தி இன்மைபற்றிய வியலாமையாவது, யாதொரு செயல் அதன் சொரூப இலக்கணத்தை நோக்குமிடத்து இயலுந் தகையதாயினும், அதனைச் செய்தற்குரிய சத்தி அதனைச் செய்யுமாறு எடுத்துக் கொண்டானிடத்து இன்மைபற்றிய வியலாமை. இமய பருவதத்தை நிலை பெயர்த்தல் ஒரு மனிதன வியலாமைபோல. இமய பருவதம், அதனுக்கு இயைந்த ஆற்றல் தொழிற் படுமிடத்து, நிலை பெயர்தற் குரியதாயினும் அவ்வாற்றல் யாதொரு மனிதனிடத்தாவது இல்

லாண்மையால், அவன் அதனை நிலை பெயர்க்க மாட்டானாயினன். கடவுளிடத்தே இந்த ஆற்றல் உண்டாதலால், அவர் அதனை நிலை பெயர்க்க வேண்டுமென்று திருவுள்ளங் கொண்டால், கணப்பொழுதிலே அங்ஙனஞ் செய்துவிடுவர்.

இமய பருவதத்தை நிலை பெயர்த்தல் போன்ற இந்தச் செயல்களை சிற்றறிவுஞ் சிறு தொழிலுமுடைய நம்மனோரால் இயலாமல், முற்றறிவும் முற்றுத் தொழிலும் உடைய கடவுளா லியலுவனவாகும். செயல்களின் சொரூப இலக்கணத்தை நோக்க வியலாதன, ஒருவராலு மியலாதனவேயாய், கடவுளாலு மியலாதனவேயாகும். இந்த வியலாமைகளையும் அவர் செய்யமாட்டுவர் என்பது அவர் பொய்யை மெய்யாக்க வல்லுநர் என்பது போலும் ஓர் பேரபத்தமாம்.

ஆகவே, உண்மைப் பொருளாகிய உலகத்தைச் சிருட்டித்தற்கு முதற்காரணம் ஒன்று வேண்டப்படும் என்பது தட்டின்றிப் போந்திடும். இந்த முதற்காரணத்தையே சைவ சமய சாத்திரங்கள் "மாயை" என்று எடுத்துக்காட்டும். மா-ஒடுக்கம்; யா-தோற்றம்; பிரபஞ்சம் ஒடுங்குதற்கும் மீளத் தோன்றுதற்கும் காரணமாயுள்ள பொருள் மாயை என்றபடியாம். இந்தப் பொருள் தானும் தனக்கொரு முதற்காரணத்தை வேண்டி நிற்குமாயின், அந்தப் பொருளும் தனக்கொரு முதற்காரணத்தை வேண்டி நின்று இங்ஙனமே ஒன்றினொன்று முற்றாமல் அநவத்தையாய் முடிந்திடு மாதலால், முதற்காரணமாகிய மாயை நித்தியமாய் வியாபகமாய் சடமாயுள்ளதென்று சைவ சமய சாஸ்திரங்கள் பிரதிபாதிக்கும்.

நன்று கூறினீர்! கடவுள் ஒருவரே நித்தியப்பொருள் : மாயையும் கடவுளை ஒப்ப நித்தியப் பொருளாயின், கடவுள் சமான ரகிதர் என்னும் கொள்கை அழிவுற்றிடுமன்றே என்பீராயின், கடவுள் சமான ரகிதர் என்பது அவருடைய நித்தியத்துவத்தை நோக்கியன்றென்க. அவருடைய வரம்பிலின்பம், வரம்பில் ஞானம், வரம்பிலாற்றல், சுவதந்திரம் முதலிய இலக்கணங்களையுற்றே அவர் சமான ரகிதர் எனப்படுவது. கடவுளிடத்திலே காணப்படும் எந்த இலக்கணமும் பிறிதொரு பொருளிடத்துக் காணப்படுதல் கூடாதாயின், கடவுள் உண்மைப் பொருளாக, அவருடைய சந்நிதியிலே யாதொரு உண்மைப் பொருள், யாதொரு காலபரியந்தமாவது அமைந்து விளங்குதல் கூடாது என்பது பெறப்பட்டு, அவருடைய சந்நிதியில் ஆன்மாக்களும் பிரபஞ்சமும் நிலைபெற்று நிற்றல்பற்றி, அவை அங்ஙனம் நிலைபெற்று நிற்குங்காறும் கடவுளுடைய சமான ரகிதத்தன்மை அழி

வுற்றதென்று முடித்திட நேர்ந்திடும். ஆகவே அவருடைய சமான ரகிதத்தன்மை அவருடைய முக்கிய குணங்களை நோக்கியன்றிச் சாமானிய குணங்களை நோக்கிச் சாதிக்கப்படுவதன் றென்பது இனிது சித்திக்கு மென்க.

அற்றன்று; கடவுள் சங்கற்பமாத்திரை யாற்றானே இந்த உலகங்களையெல்லாம் சிருட்டித்தா ராதலின், அவருடைய திருவுள்ளத் திருந்தே இவைகள் தோன்றின. ஆகவே, அந்தத் திருவுள்ளமே இவற்றுக்கும் பிறப்பிடம் என்பீராயின், அவருடைய திருவுள்ளமாகிய அருட்சத்தி பிரபஞ்ச தோற்றத்துக்குத் துணைக்காரணமன்றி முதற் காரணமாக மாட்டாது. அன்றியும் ஒரு பொருளிலிருந்து அதற்கு இனமான பொருளே தோன்றுமாதலின் நிர்மலப் பொருளாகிய கடவுளுடைய திருவுள்ளத்திருந்து தோன்றிய பிரபஞ்சமும் நிர்மல வஸ்துவாகவே இருக்கும். இங்ஙனமின்றிப் பிரபஞ்சம் அசுத்தங்களுக் கெல்லாம் உறைவிடமாக இருத்தலால், இதனைக் கடவுளுடைய திருவுள்ளத்திலிருந்து தோன்றியதென்பது ஒருவாற்றானும் அமைவுடைத்தாகாது என்க.

இங்ஙனமுமன்று! பிரபஞ்சம் எல்லாம் இன்மைப் பொருளேயன்றி உண்மைப் பொருள் அல்ல. எங்களுடைய மயக்கம் பற்றி இது உண்மைப் பொருள்போல எமக்குத் தோன்றுவதாயிற்று என்பீராயின், பிரபஞ்சம் மயக்கக்காட்சி என்பதைக் கண்டார் யார்? ஒருவருமில்லை யாதலின், அது மயக்கக்காட்சி என்பது ஒருவாற்றானும் நிலை பெறமாட்டாது. ஆனால் பொருள்களின் உண்மை இன்மைகளை நாம் நிச்சயிப்பதெல்லாம் எம்முடைய அறிவுகொண்டே யாதலின், எம்முடைய அறிவுக்கு உண்மைக் காட்சியாகப் புலப்படுவதொன்றை நாம் எமது ஆரோபம் பற்றி மயக்கக்காட்சி என்று முடிப்பது, கண்டதை ஒழித்துக் காணாததைச் சாதிக்கும் ஓர் கபடமார்க்கமன்றிப் பிறிதாகா தென்க. ('பிரபஞ்ச விசாரம்' காண்க).

நன்று சொற்றீர். பிரபஞ்சம் இல்பொருளானமை பற்றியன்றே "இல்லையெனு மாயையில் இட்டனை நீ" என்று பெரியோரும் எடுத்து மொழிந்தார் என்பீராயின்; இந்தப் பெரியார்தாமே பிரபஞ்சத்தை உள்பொருளென்று பல இடங்களிற் பலவாறு வற்புறுத்திக் கூறியிருத்தலையும் நாம் உற்றுநோக்குதல் வேண்டும். இவர்கள் மாயையை "இல்லையெனு மாயை" என்றெடுத்தோதியருளியது அது எமது பொறி புலன் கரணங்களுக்குப் புலப்படுதல் கூடாத

அத்துணைச் சூக்குமப்பொருளா யிருத்தல்பற்றி யல்லது மற்றன்றென்க.

எனவே பிரபஞ்சம் உள்பொருளே என்பதும், எனவே இதனுக்கோர் முதற்காரணம் வேண்டும் என்பதும், அந்த முதற்காரணம் நித்தியப்பொருளாய் இருத்தல் வேண்டும் என்பதும் பெறப்பட்டு இந்தப் பொருளே மாயையா மென்று சைவ சித்தாந்தம் சாதிக்கும் உண்மை வலியுறுத்தப்பட்டவாறு மென்க.

(இந்து சாதனம்)

---

## இக்காலத்து ஆலய வழிபாடு

சர்வவியாபகமுள்ள கடவுள் ஆலயத்திலே தயிரில் வெண்ணெய் போலவும் ஒழிந்த இடத்திலே பாலில் வெண்ணெய் போலவும் விளங்குவரென்று சைவசமய சாஸ்திரங்கள் கூறும். அக்காரணத்தினலேயே எச்சமயத்தாரும் கடவுளை வணங்குவதற்கு ஆலயத்தை விசேஷ ஸ்தானமாகக் கொள்வர். "ஆலயந் தொழுவது சாலவு நன்று" என்றார் ஒளவையாரும். நஞ் சைவ சமயத்தவர் பூர்வந் தொட்டு ஆலய வழிபாடு செய்யவேண்டு மென்னும் நியதியுடையவர்கள். ஆலய வழிபாடு பயபக்தியோடு செய்து வந்தார்கள். ஆனற் காலகதியில் அந்நியநாகரீக மேலீட்டினல் இந்த நியதி குறையத் தொடங்கிக் கொண்டதென்றே சொல்லவேண்டி யிருக்கின்றது. ஆலயத்திற்குச் செல்வோர் தொகை முன்னரைக் காட்டிலும் இப்பொழுது குறையவில்லையாயினும் அங்குச் செல்லும் நோக்கத்தில் வித்தியாசம் ஏற்படலாயிற்று. கடவுளை மெய்யன்போடு வழிபடல் வேண்டுமென்னும் நோக்கத்துடன் செல்வார் இக்காலத்திற் சிலரினுஞ் சிலராயினர். ஆலயஞ் செல்வார் பலர் கலியாண வீட்டிற்குச் செல்வார்போலவும் நாடகம் பார்க்கச் செல்வார்போலவும் கூட்டங்களுக்குச் செல்வார் போலவும் பொருட்காட்சி பார்க்கச் செல்வார்போலவும் மிக்க ஆடம்பரத்தோடு செல்லத் தலைப்பட்டுக் கொண்டனர். ஆடவருள் ஆலயஞ் செல்வார் சிலர் வேடிக்கை பார்க்கும் நிமித்தமாகவும், வேறு சிலர் பொழுதுபோக்கும் நிமித்தமாகவும், ஒழிந்த சிலர் தங்கள் சுற்றமித்திரரைத் தரிசிக்கும்படியும், இன்னுஞ் சிலர் கண்காட்சியை விரும்பியும், மற்றுஞ் சிலர் சங்கீதங் கேட்கும் நோக்கமாகவும், ஏனைய சிலர் வாணவேடிக்கையின் பொருட்டும் இங்ஙனம் பல வேறு நோக்கங்களுடன் செல்கின்றனர்.

*　*　*　*

இனி, ஆண்களைக் காட்டிலும் பெண்களே பெரும்பான்மையும் கடவுட்பத்தியிலும் ஆலய வழிபாட்டிலும் சிறந்தவர்களாயிருந்தார்கள். முற்காலத்துள்ள பெண்கள் ஆலயத்திற்குப் போதல், சிவபுராணங் கேட்டல், விரதங் காத்தல், கோயிலிலே திருத்தொண்டு செய்தல் முதலிய நியதிகளையுடையரா யிருந்தார்கள். இப்பொழுதும் பெண்கள் ஆலயத்திற்குச் செல்கின்றார்களென்பது உண்மையே. ஆனால் நோக்கங்கள் மாறிவிட்டன. அநேக பெண்கள் வேடிக்கையார்த்தமாகவே செல்கின்றார்கள். சில பெண்கள் தாங்கள் நவீனமாகப் பெற்ற ஆடையாபரணங்களை உபயோகித்தற்குத் திருவிழாக் காலமே நல்ல சந்தர்ப்பமென் றெண்ணிக் கோயிலுக்குச் செல்கின்றார்கள். வேறு சில பெண்கள் சிறு வயசிலே தங்களுடன் கூடிப்படித்த சிநேகிதைகளைத் தரிசிக்க இதுவே நல்ல சமயம் என்றெண்ணிக் கோயிலுக்குச் செல்கின்றார்கள். இன்னுஞ் சிலர் தங்கள் கணவரைக் கொண்டு புதிய வஸ்திரங்களை வாங்குவித்தற்கும் புது மாதிரியான நகைகளைச் செய்வித்தற்கும் தக்க சாட்டு ஆலயத்திற்குச் செல்ல வேண்டும் எனச் சொல்வதே யென வெண்ணி அதனை நிறைவேற்றும்படி செல்கின்றார்கள்; ஒழிந்த சிலர் குதிரை வண்டி மோட்டார் ரதம் என்னு மிவற்றில் ஊர்ந்து செல்வதற்கு இதுவே வாய்த்த சமையம் என்றெண்ணிச் செல்கின்றார்கள். ஒழிந்த சிலர், சாடி மரவை கற்சட்டி அல்மோனியாப் பாத்திரங்கள் சட்டிபானை பெட்டி கடகம் பாவைப்பிள்ளை சருவம் சருவச்சட்டி முடிமயிர் கண்ணாடி சீப்பு சவர்க்காரம் பூசல்மா கடுதாசிமலர் என்னும் இப்படிப்பட்ட பொருட்களை வாங்குவதற்குக் கோயில் வீதியில் வைக்கப்பட்ட கடைகளே வாய்த்த இடங்களென எண்ணிச் செல்கின்றார்கள். மற்றுஞ் சிலர் முருகேசு "பெண்சாதி" எவ்வகையான உடை தரித்திருந்தாள், சரவணமுத்து பெண்சாதி எவ்வகையான ஆபரணங் பூண்டிருந்தாள், சங்காப்பிள்ளை பெண்சாதி எவ்வகையாகச் சேலை கட்டியிருந்தாள், கந்தர் பெண்சாதி எவ்வகையாகத் தலைசீவி முடித்திருக்கின்றாள், என்ற இவ்விநோதங்களைப் பார்த்துத் தாங்களும் அங்ஙனம் உடுக்கவும் நடக்கவும் கட்டவும் பூட்டவுஞ் செல்கின்றார்கள். சிலரினுஞ் சிலரே உண்மையான பயபக்தியுடன் கோயிலுக்குச் செல்கின்றார்கள். இவர்கள் பயபக்தியோடு செல்கின்றார்க ளென்பது இவர்கள் செல்லும் ஒதுக்க பதுக்கத்தாலும் ஆசார நைட்டிகத்தாலும் ஆடம்பர மின்மையாலும் நன்கு அறியத்தக்கதாகவிருக்கும். பயபக்தியின்றிப் பல நோக்கங்களுடன் இப்பெண்பாலாரும் ஆடவரும் செல்லத் தலைப்பட்டமையினாலே,

ஆசாரமின்றிச் செல்வாராய், குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொள் வார்போ லாயினர். இந்த நவநாகரிகங்களையும் இவற்றால் விளையும் துர்ப்பழக்கங்களையும் அறவே யொழித்தல்வேண்டும். கோயிலுக்குப் போகும்போது அகமும் புறமும் ஆசாரசீலராய்ச் செல்லுதல் வேண்டும். இல்லையேற் போகாதொழிதலே நன்று.

* * * *

திருக்கோயிலிலே செய்யத் தகாத குற்றங்கள் இவையென்பதை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் தொகுத்து எழுதியிருக்கின்றார்கள். ஆலய வழிபாட்டிற்குச் செல்வோர் அவற்றை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளும் வண்ணம் இங்கே தருகின்றோம். அவையாவன:—
"ஆசார மில்லாது போதல், கால் கழுவாது போதல், எச்சிலுமிழ் தல், மலசலங்கழித்தல், மூக்கு நீர் சிந்துதல், பாக்குவெற்றிலை யுண்டல், போசன பானம் பண்ணுதல், ஆசனத்திருத்தல், சயனித்தல், காலை நீட்டிக்கொண்டிருத்தல், மயிர்கோதி முடித்தல், சூதாடல், சிரசிலே வஸ்திரந் தரித்துக்கொள்ளுதல், தோளிலே உத்தரீயம் இட்டுக் கொள்ளுதல், போர்த்துக் கொள்ளுதல், சட்டை யிட்டுக்கொள்ளுதல், பாதரக்ஷை இட்டுக்கொள்ளுதல், விக்கிரகத்தைத் தொடுதல், நிருமாலியத்தைக் கடத்தல், நிருமாலியத்தை மிதித்தல், தூபி துசத்தம்பம் பலிபீடம் இடபம் விக்கிரகம் என்னும் இவைகளின் நிழலை மிதித்தல், வீண்வார்த்தை பேசல், சிரித்தல், சண்டையிடுதல், விளையாடுதல், சுவாமிக்கும் பலிபீடத்துக்குங் குறுக்கே போதல், ஒருதரம் இருதரம் நமஸ்கரித்தல், ஒருதரம் இருதரம் வலம் வருதல், ஓடி வலம் வருதல், சுவாமிக்கும் பலிபீடத்துக்கும் இடையே நமஸ்கரித்தல், அகாலத்திலே தரிசிக்கப் போதல், திரைவிட்ட பின் வணங்குதல், அபிஷேக காலத்திலும் நிவேதன காலத்திலும் வணங்குதல், முற்பக்கத்தும் பிற்பக்கத்தும் வணங்குதல், திருவிளக் கவியக்கண்டுந் தூண்டாதொழிதல், திருவிளக் கில்லாதபொழுது வணங்குதல், உற்சவங்கொண்டருளும் பொழுது அங்கேயன்றி உள்ளே போய் வணங்குதல் முதலியவைகளாம்."

இந்து சாதனம்

# சன்மார்க்கம்

பாளையங்கோட்டை ஸ்ரீமான் V. P. காந்திமதிநாதபிள்ளை, B.A.,
அவர்கள் அச்சிட்டது.

"முன்னெறியாகிய முதல்வன் முக்கணன்
றன்னெறியே சரணாதறிண்ணமே
யந்நெறியே சென்றங் கடைந்தவர்க்கெலா
நன்னெறியாவது நமச்சிவாயவே"

சத், மார்க்கம், என விரண்டு பதங்கள் சேர்ந்து சன்மார்க்கம் என நிற்கும். இச்சொல் சத்துக்கு மார்க்கம் என விரிந்து, சத்துப் பொருளை யடையுமார்க்கம், எனவும் பொருள் தரும். எனவே, சத்துப் பொருள் யாது? அதனையடையும் பொருள் யாது? யாண்டு நின்றும் அடைய வேண்டுவது? என்பதே நாம் முதற் கண் ஆராய்ச்சி செய்யக் கிடப்பது. என்றைக்குமுள்ள பொருள் எது? அதுவே சத்துப் பொருள். இதனையே "பண்டு மின்றுமென்று முள்ளபொருளென்றே பல்லாண்டு கூறுதுமே" என விளக்கியதும். இப்பொருள் என்றும் ஒரு படித்தாயிருக்கும் பொருள். இதற்கு ஒடுக்கந் தோற்றமென்பதில்லை. இதுவே முழு முதற் கடவுளாகிய சிவப்பொருள். இச்சிவத்தையே யிதன்றலைப்புத் தேவாரச் சுருதியில் 'முதல்வன்' 'முக்கணன்' என்று கூறியது. இதுபோலன்றி, உலகப் பொருள்களாகிய வனைப்பொருள்கள் ஒடுங்கியும், மீளத்தோன்றியும், அவ்வாறே மாறி மாறித் தொழிற்பட்டும் வரும். இக்கருத்தினையே நமது ஆசாரிய சுவாமிகள் "தோற்ற முண்டேல் மரணமுண்டு" என்றருளிச் செய்ததும். இவ்வுலகப் பொருள்கள் காரணரூபத்தில் என்றுமுள்ளவைகளே யாயினும், ஒரு காலத்துக் காரிய ரூபமாக வெளிப்பட்டுத் தோன்றும். காலம் வந்துழிக் காரண ரூபமாக மறைந்தும் போம். ஆதலால் இவைகள் அசத்தெனவும் அநித்தியமெனவுங் கூறப்படும். ஜீவர்களாகிய நமக்குத் தனித்து நிற்குமியல்பு என்றுமில்லை. அசத்துப் பொருள்களைச் சார்ந்து நிற்போம். அவைகளை விட்டு நீங்கியதும், சத்துப்பொருளைச் சார்ந்து நிற்போம். அசத்துப் பொருள்களைச் சார்ந்து நிற்கும்போது அவற்றினியல்பாகிய தோற்றவொடுக்கம், நம்மாட்டுங் காணப்படும். அவற்றை விட்டு நீங்கிச் சத்துப் பொருளைச் சார்ந்ததும், அவற்றினியல்பாகிய என்று மொருபடித்தாயிருக்குந் தன்மை நம்மாட்டுங் காணப்படும். ஒருகாலத்துச் சத்தினியல்பும், ஒரு காலத்து அசத்தினியல்பும், நம்மாட்டுக் காணப்படுத

லால்,* நாம் சதசத்தெனப்படுவோம். சதசத்துப் பொருள்களாகிய நாம், அசத்துப் பொருள்களைச் சார்ந்து நிற்பதொழிந்து, சத்துப் பொருளாகிய சிவப்பொருளையுடைய மார்க்கமே சன்மார்க்கமாம். இம் மார்க்கத்தினையே நமது ஆசாரிய சுவாமிகள் 'முன்னெறி' யென்றும், "முதல்வன் முக்கண்ணன் றன்னெறி" யென்றும் அருளிச்செய்தனர். இச்சன்மார்க்கமே இன்று சம்பாஷணைக்கு எடுத்துக்கொண்ட விஷயம்.

சத்துப்பொருளை யடைவது சன்மார்க்கமெனக் கூறினோம். அதனையடைய வேண்டுவதேன்? கூறுதும். ஜீவர்களாகிய நாம் சுகத்தையே விரும்புகிறோம். அச்சுகமும் என்றும் நிலைத்து நிற்க விரும்புகிறோம். அசத்துப் பொருள்களால் வருஞ்சுகம் அத்தன்மைத்தல்ல. அவைகளே துக்கத்திற்குங் காரணமாகின்றன. மனைவி மக்களாதி சுற்றத்தாரால் நமக்கு வருஞ்சுகமுமுண்டு. அவர்களால் நமக்கு வருந் துக்கமுமுண்டு. மாடமாளிகையாதி ஐஸ்வரியங்களால் நமக்கு வருஞ் சுகமுமுண்டு. அவைகளால் நமக்கு வருந்துக்கமு முண்டு. "இன்பமுண்டேற் றுன்பமுண்டு, ஏழைமனை வாழ்க்கை" என்றார் நமது ஆசாரிய சுவாமிகள். இவ்வசத்துப் பொருள்களால் வருஞ்சுகத்தினுந் துக்கமே மிகுந்து நிற்கும். அச்சுகமும் என்றும் நிலைத்தவாறில்லை. சிறிது காலஞ் சுகத்தைத் தந்து வந்த மனைவிமக்கள் அதனைத் தாராதே யொழியினு மொழிவர். மாறித் துக்கத்தையே தரினுந்தருவர். ஏனைப்பொருள்களு மப்படியே. அன்றியும், அப்பொருள்கள் ஒடுங்கிப் போங்காலத்தில், அவைகளால் வருஞ்சுகமுமின்றாம். அவ்வாறொடுங்குவது மின்னகாலத் தென்பதுமில்லை. நீண்ட காலம் ஒரு பொருள் நிற்குமென வெண்ணுகிறோம். கணப்பொழுதிலின்றாகின்றது. நல்ல விருக்ஷத்தை யுண்டுபண்ணி யதன் கனியையுண்டு சுகிக்க, நீண்ட காலமாய் ஒருவன் எண்ணியிருக்கிறான். திடீரென ஒரு சுழல் காற்று அதனை வீழ்த்துகின்றது. நல்ல புதல்வனைப் பெற்று, இவன் றனக்கு நல்ல சுகத்தைத் தருவானென எதிர்பார்த்து நிற்கிறான். அவனாற் சுகங் கிடைக்குந் தருணத்தில், இவ்வுலக வாழ்க்கையினின்றும் நீங்குகின்றான்.

"உண்டு போலின்றா முலகைத் திரமெனவுட்
கொண்டு நான் பெற்ற பலன் கூறாய் பராபரமே"

என்றிரங்கினர் நமது தாயுமான சுவாமிகளும். நாங் கூறிவரும் ஸ்திரமின்மை, யிவ்வுலகப் பொருள்கட்கு மாத்திரமன்று. மறுவுலகவாழ்க்

கையு மிவ்வாறே. ஆண்டுள்ள இந்திராதி பதங்களுமிவ்வாறே. அவை களும் ஸ்திரமல்ல. அவைகட்கு மழிவுண்டு.

"நூறு கோடி பிரமர்க ணொங்கினார்
ஆறு கோடி நாராயண ரங்ஙனே
ஏறு கங்கை மணலெண்ணி லிந்திரர்
ஈறிலாதவன் ஈசனொருவனே"

என்றருளிச் செய்தனர் நமது அப்பர் சுவாமிகளும். ஆதலால், இவ் வுலகத்திலேனும் மறுவுலகத்திலேனுமுள்ள அசத்துப் பொருள்களால் வருஞ் சுகத்தில் நமக்குத் திருப்தியென்பதே யில்லை. தனித்த சுகத் தையே, துக்கம் விரவாத சுயம்பு சுகத்தையே, என்றும் நிலைத்து நிற் குஞ் சுகத்தையே நாம் எந்நாளும் பெற விரும்புகின்றோம்.

"துக்க மிக்க வாழ்க்கையின் சோர்வினைத் துறந்து நீர்
தக்கதோர் நெறியினைச்சார்தல் செய்யப்போதுமின்"

என்ற தமிழ்வேதச் சுருதியின் கருத்து மிதுவே.

அத்தன்மைத்தான சுகத்தைத் தரும்பொருள், சத்துப் பொரு ளொன்றே. அதற்கு மலமாயா கன்மங்களின் தொடர் பின்று. அத னைச் சார்ந்தார்க்கு மஃதின்றாம். அதற்கு அவற்றால் வருஞ் சுக துக்கங்களின்றாம். அதனைச் சார்ந்தார்க்கு மின்றாம். அதன்பாலுள்ள சுகம், அருளால் விளையுஞ் சுகம். அது பரமானந்த சுகம். "சித் தத்துள் தித்திக்குந் தேன்" அச்சுகம் உலகிற் கிடைக்கு மெவ் வகைச் சுகங்களினு மிகவினியது. அதனையே,

"கனியிலுங் கட்டிபட்ட கரும்பிலும்
பனி மலர்க்குழற் பாவை நல்லாரிலும்
தனிமுடி கவித்தாளு மரசிலு
மினியன்றன் னடைந்தார்க்கிடை மருதனே"

எனக்கூறுந் தமிழ்வேதம். அதனால் வருஞ் சுகம், நிறைந்த சுகம் "ஆனந்த பூர்த்தி" யதுவே. அச்சுகத்திற் கோரளவில்லை. அது "சுகவாரி". அதனுட் படிந்தார் சுகக்கடலில் மூழ்கினாராவர். அப் பொருட்கு அழிவென்பதே யில்லை. அதனால் வருஞ் சுகத்திற்கும் அஃதின்றாம். அதற்குத் தேய்தல் வளர்தலில்லை. அதனால் வருஞ் சுகத்திற்கு மஃதில்லை. தன்பாலுள்ள சுகத்தைத் தன்னையடைந் தார்க்குதவும் வண்மை யதற்குண்டு. அன்பையே தனக்கு வடிவமா யுடையது. அதுவே தனது சத்தி.

" அன்புஞ்சிவமுமிரண்டென்பாறிவிலார்
அன்பே சிவமாவதாரு மறிந்திலர் "

என்பது திருமந்திரம். இதனையன்றி, சீவர்களாகிய நமக்கு நித்திய சுகத்தைக் கொடுப்பது வேறெது ?. இச்சுகத்தைப் பெருதற்கன்றோ,

" பத்தாருந்து பரமசுகம் யானருந்த
எத்தனைநாட் செல்லுமியம்பாய் பராபரமே "

என்று பரிந்திரங்கினர் நமது தாயுமான சுவாமிகளும். பிரமன் அம்ஸ வடிவாய் மேனோக்கிச் சென்றதும், விண்டு வராக வடிவாய்க் கீழ்நோக்கிச் சென்றதும், இச்சுகம் பெருதற்கன்றோ. இக்கருத்தினையே, ஸ்ரீவாசகப் பெருமான்

" ஒருத்தனே யுன்னை யோலமிட்டலறி
யுலகெலாந் தேடியுங் காணேன் "

என்றதும். நமது தாயுமான சுவாமிகள்

" தேடினேன் றிக்கனைத்துந் தெண் டனிட்டேன் சிந்தைநைந்து
வாடினேனென்மயக்க மாற்றாய் பராபரமே "

என்றதும். இத்தன்மைத்தான சத்துப்பொருளைத் தேடியடையு மார்க்க மன்றோ உண்மைச் சன்மார்க்கம். இம்மார்க்கமன்றோ துன்பக்கடலில் மூழ்கி வருந்துவார்க்குப் புகலிடமாய் நிற்பது.

" முன்னெறியாகிய முதல்வன் முக்கணன்
றன்னெறியே சரணாதறிண்ணமே "

என்று இதன் றலைப்புச் சுருதியிற் கூறியது மிம்மார்க்கத்தையே.

சத்துப் பொருளொன்றே நித்தியானந்த சுகப்பொரு ளென்பது பொருந்தும். அது சிவப்பொருள் ஒன்றே யென்பதென்னை ? சத்துப் பொருள் தவிர, ஏனையெல்லாப் பொருள்கட்கும், ஒடுக்கந்தோற்ற முண்டெனக் கூறினோம். அப்பொருள்கள், தனித்தனி வெவ்வேறு காலங்களில் ஒடுங்குவதோடு, அவை யாவும், ஒருங்கே யொடுங்குங் காலமும் என்றாயினும் வரும். அக்காலம் வந்துழி சர்வ சம்மார கிருத்தியத்தை நேர்நின்றியற்றும் பொருள் ஒன்றே யொடுங்காது நிற்கும். அக்காலத்துப் பிறபொருளில்லை யாதலால், அவற்றைத் தானதிட்டித்து நின்று சம்ஹாரம் நடத்துவ தென்பது மின்றாம். நேர்நின்று சர்வ சம்ஹாரம் நடத்தும் பொருளே, தாமொடுக்கிய பொருள்களை மீளவும் தோற்றுவிக்கும். எனவே, இச்சர்வ சம்ஹார கிருத்தியத்தை நேர்நின்று நடத்துதற்குரிய பொருள் யாதோ, அதுவே சத்

துப்பொருளாம். சிவப்பொருளன்றி, பிரமவிட்டுணு முதலிய வேனைப் பொருள்களிலொன்றற் கேனும் மவ்வாறியற்று முரிமையாண்டும் கேட்கப்படவில்லை. சிவப்பொருளொன்றற்கே யவ்வுரிமை யுளதென எல்லாச் சுருதிகளுங் கூறும். அதுவே நித்தியமாயுள்ள பொருள். அதுவே நித்தியானந்த பரமசுகத்தைத்தரும் பொருள்.

அச்சிவப்பொருளையடைய வேண்டுமென்னில் அதுதான் யாண்டுள்ளது? இவ்வுலகத்திலா? மறுவுலகத்திலா? இன்ன வுலகத்தென்பது மில்லை, இன்ன விடத்தென்பது மில்லை. எல்லா வுலகத்திலு மெல்லா விடத்திலு முள்ளது. "பார்க்குமிடமெங்கு மொரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணானந்த" மாயுள்ளது, அவ்வாறுளதேல் அதனையடைவதென்ப தென்னை? அது எங்குமிருப்பினும், அதன்பால் நம் மறிவிச்சை செயல்கள் நிலைத்து நிற்பதில்லை. அவையாவும் அசத்துப் பொருள்களின்பாலே நிலை பேறுடையன. அசத்தினையே யறிகிறோம் அதனையே யிச்சிக்கிறோம். அதன்பாலே நஞ்செயல் நிகழும். நமதறிவிச்சை செயல்கள் அசத்தின்பால் முற்றும் நிகழும்போது சத்தின்பால் ஒரு சிறிதும் நிகழ்தலில்லை. அவ்வறிவிச்சை செயல்களைச் சத்தின்பாற் செலுத்துதலே யதனையடையு மார்க்கம். இதுவே சன்மார்க்கம்.

ஒரு பொருளின்பால், அறிவிச்சை செயல்களை நிறுத்துதலே யதனை யடைதலென்றோம். ஜீவர்கட்கும் அறிவிச்சை செயல்களுண்டேல், அவைகள் சத்தின்பாற் சாராது நிற்பதென்னை? ஜீவர்களாகிய நமக்கு அறிவிச்சை செயல்களியற்கையே யுண்டு. ஆனால் ஏகதேசப் பட்டவைகளே. ஒரு காலத்து, ஒன்றனையே யறிகிறோம், ஒன்றனையே யிச்சிக்கிறோம், ஒன்றனையே செய்கிறோம். எல்லாப் பொருள்களையு மொருங்கே யறிந்து, ஒருங்கே யிச்சித்து, எல்லாச் செயல்களையு மொருங்கே செய்யும் வியாபக அறிவிச்சை செயல்கள் நமக்கென்று மில்லை. அவைகள் சிவப்பொருளொன்றற்கே யென்னாளுமுள. அன்றியும், அச்சிவப்பொருளின் அறிவிச்சை செயல்கட்கு எக்காலமும் நிகழ்ச்சி யுண்டு. அதுபோலன்றி ஜீவர்களினறிவிச்சை செயல்கள் துவக்கத்தில், ஆணவமலத்தாற் றடைப்பட்டு யாதொரு நிகழ்ச்சியு மின்றிக் கிடந்தன. அத்தடை நீங்கினாலன்றி யவ்வறிவிச்சை செயல்கள் சத்தின்பாற் சாரா. அத்தடை நீக்குதற்கென்றே சத்தாகிய சிவப்பொருள், மாயையினின்றுந் தனுகரணாதிகளைச் சிருட்டித்து ஜீவர்கட்குக் கூட்டுவிக்கும். கூட்டுவிக்கவும், அந்நிகழ்ச்சி சத்தின்பாற் செல்லாதாயினும், கூட்டுவிக்கப்பட்ட தனுகரணாதிகளாகிய அசத்துப்

பொருள்களின்பாற் செல்வதாகும். அவ்வசத்துப் பொருள்களே, ஜீவர்களைப் பந்தித்துள்ள மலத்தைக் கழுவுமருந்தாம். ஆடையிற் படிந்துள்ள அழுக்கைப் பலவகை யுவர் மண்ணாலும் பலகாற் கழுவுகிறோம். அதுபோல், ஜீவர்களைப் பந்தித்துள்ள ஆணவ மலமும், மாயாமலத்தினின் றுண்டாக்கப்பட்ட பலவகைத் தனுகரணாதிகளாற் பலகாற் கழுவப்படல் வேண்டும். உவர் மண்ணாற் கழுவுந்தோறும் கழுவுந்தோறும் ஆடையினழுக்குச் சிறிது சிறிதாய் நீங்கும். அவ்வழுக்கு முற்றும் நீங்கியவழி யவ்வாடை சுத்த வெண்மையை யடையும். அதுபோலப் பலவகைத் தனுகரணாதிகளோடு, ஜீவர்களைக் கூட்டிப் பிரிக்குந்தோறும் அவர்களைப் பந்தித்துள்ள ஆணவ மலமுஞ் சிறிது சிறிதாய் நீங்கும். அம்மலம் முற்றும் நீங்கவே, ஜீவனும் தன்னைப் பந்தித்துள்ள தடையினின்று முற்றும் நீங்குவானாவான். அவனதறிவிச்சை செயல்களும் நித்தியானந்த சுகவடிவாயுள்ள சிவப் பொருளின்பால், தானே சார்வனவாகும்.

"பசுத்தன்மை நீக்கியப் பாச மறுத்தாற்
பசுக்கள் தலைவனைப் பற்றிவிடாவே"

என்னுந் திருமந்திரத்தின் கருத்து மிதுவே.

அசத்துப் பொருள்களின் பால், நமது அறிவிச்சை செயல்களைச் செலுத்துதலே, அவற்றைச் சத்தின்பாற் செலுத்துதற்குரிய உபாயமா மென்றனம். அசத்துப் பொருள்கள் தான் யாவை? அவற்றை யடைந்து சத்துப் பொருளை யடைதல், எங்ஙனம்? கூறுதும். இவ்வுலகிலும், ஏனை யிந்திராதி தேவருலகிலும் நமக்கு எவ்வகைப் போகங்களையுங் கொடுக்குஞ் சகல பொருள்களும், அசத்துப் பொருள்களே.

"மண்டனில் வாழ்வும் வானத்தரசயன் மாலார் வாழ்வு
மெண்டரு பூதபேத யோனிகளியாவு மெல்லாங்
கண்ட விந்திரமா சாலங்கனக் கழுதிர தங்காட்டி
யுண்டுபோலின்றும் பண்பிலுலகினை யசத்துமென்பர்"

என்று நமது சந்தான குரவர் சுவாமிகள் கூறியபடி, யிவ்வுலக பதங்களும் ஏனையிந்திராதி பதங்களும், அசத்துப் பொருள்களே. அவைகளையடையு மார்க்கமும், அசத்து மார்க்கமாம். இதுவன்றிச் சத்துப் பொருளை யடையுமார்க்கம், சத்துமார்க்கம், அல்லது சன்மார்க்கமென நிற்கும். இம்மார்க்கத்திற்கு அசத்து மார்க்கமே மார்க்கமாம். அஃதாவது இச்சன்மார்க்கத்திற்கு ஏனைமார்க்கங்களி யாவுஞ் சோபான மார்க்கங்களாம். அச்சோபான மார்க்கத்திற் சென்றன்றி, யிச்சன்

மார்க்கத்திற் செல்லுதல் கூடாதாகும். எதுபோலெனில், கூறுவம். வாரணாசியிற்போய், விசுவேசரைத் தரிசிக்க விரும்பிய ஒருவன், இடையிலுள்ள, ஏனைப் பட்டினங்களிற் சென்றே யவ்வாரணாசி சேரல் வேண்டும். அப்பட்டினங்கள் யுத்தேசமாய், மதராஸ், பம்பாய் முதலிய ஆறு என்று கொள்வோம். புறப்பட்ட தலத்தினின்றும், மதராஸ் சேருமளவும், மதராஸ் மார்க்கத்திற் செல்வான், அப்பால் பம்பாய் மார்க்கத்திற் செல்வான். இவ்வாறே சென்று முடிவில் வாரணாசி மார்க்கத்திற் செல்வான். ஏனை மார்க்கங்களிற் சென்றன்றி யிவ்வாரணாசி மார்க்கத்திற் செல்லுதல் கூடாது. இவ்வாரணாசி மார்க்கத்திற்கு ஏனையாறு மார்க்கங்களும், சோபான மார்க்கங்களாம். சன்மார்க்கத்திற்கு, ஏனையறுவகைச் சமயங்களு மத்தன்மையனவேயாம்.

"நெறிகள் தாம்பல பலவு மாயந்த நெறிக்காஞ்
செறியுந் தெய்வமும் பலபல"

என்று தாயுமான சுவாமிகள் கூறியபடி மார்க்கங்கள் பலவேயாக, அவற்றுள் சத்துப் பொருளாகிய சிவத்தை யடையுமார்க்க மிதுதானென்று கண்டு கொள்வ தெங்ஙனம்? முன்னரே, சன்மார்க்கம், ஏனை மார்க்கங்களோடு முரணாது, அவற்றைத் தனக்குச் சோபான மார்க்கங்களாகக் கொண்டு நிற்குமெனக் காட்டினோம். இக்கருத்தினை யுட்கொண்டே அருணந்தி சிவாசாரியரும்,

"இதுவாகு மதுவல்லவெனும் பிணக்கதின்றி நீதியினு
னிவையெல்லா மோரிடத்தே காண நின்றதி
யாதொரு சமயம் அது சமயம்"

என்று உண்மைச் சன்மார்க்கத்தை யுணர்ந்து கொள்ளும் உபாயத்தையும் விளக்கினர். இவ்வுபாயத்தைக் கடைப் பிடித்தார்க்குச் சன்மார்க்க மின்னதென, வெள்ளிடை மலைபோல் விளங்கும். வேதம், சிவாகமம், இரண்டினையும், முதனூல்களாகக் கொள்ளும் மார்க்கம் எந்த மார்க்கம்? முதல்வனது வடிவம் உருவமே யென்னாமலும், அருவமே யென்னாமலும், அருவும் உருவும் அருவுருவுமெனக் கூறுமார்க்கம் எந்த மார்க்கம்? முதல்வன் சகுணனே யென்னாமலும், நிர்க்குணனே யென்னாமலும், குணமுள னென்றும், குணமில னென்றுங் கூறுமார்க்கம், எந்த மார்க்கம்? முதல்வனும் ஜீவனும் ஒன்றே யென்னாமலும், இரண்டே யென்னாமலும், ஒன்று மிரண்டு மின்றென்னாமலும், இரண்டற நிற்கும் உண்மை நிலையை யுணர்த்தும் மார்க்கம் எந்த மார்க்கம்? அந்த மார்க்கம், சைவ மார்க்கமே. அதுவே யுண்மை

மார்க்கமாகும். அதுவே ஓரேசத்துப் பொருளாகிய சிவப்பொருளின் பாற் சேர்க்கு மார்க்கம். அதுவே சன்மார்க்கம். இச்சன்மார்க்க நெறி நின்றுரையே,

" முன்னெறியாகிய முதல்வன் முக்கணன்
றன்னெறியே சரணுதறிண்ணமே
யன்னெறியே சென்றங் கடைந்தவர்க்கெல்லாம் "

எனச் சுருதி கூறியதும்.

சைவ மார்க்கத்தினைச் சன்மார்க்கமெனக் கூறினேம். இனியதன் சோபான மார்க்கங்கள் தான் யாவை? என்பதைப் பரியாலோசிப்பாம். உலகிலுள்ள எல்லா மார்க்கங்களு மிதன் சோபான மார்க்கங்களாம். இப்போதுலகிலுள்ள மார்க்கங்கள் மாத்திரமல்ல; இனி யுண்டாகு மார்க்கங்களு மிவ்வாறே.

" விரிவிலா வறிவினரும் வேறொரு சமயஞ் செய்தே
எரிவினாற் சொன்னாரேனு மெம்பிராற் கேற்றதாகும் "

என்றார் நமதாசாரிய சுவாமிகளும். வேத சிவாகமங்களிரண்டினுக்கும் புறம்பாயுள்ள, கிறிஸ்துவ மகம்மதிய மார்க்கங்களுள்பட உலோகாயுதாதி மார்க்கங்களியாவு மிதன் சோபான மார்க்கங்களே. வேதங்களின் கன்ம காண்டத்தை மாத்திர மேற்கொண்ட மீமாம்சாதி மார்க்கங்களும், அதிற் கூறிய விதிவிலக்குகளைப்பற்றி நின்று, ஜாதிபேதம், ஆச்சிரம பேத முதலியவைகளைக் கூறும் ஸ்மிருதியாதி மார்க்கங்களும், வேத சாரங்களைக் கதாரூபமாக விரித்துரைக்கும் பௌராணிகமார்க்கமு மிவ்வகுப்பினவே. வேதத்தின் ஞான காண்டமாகிய உபநிடதங்களை யதன் கன்மகாண்டத்தோடு மேற்கொண்டு, அவ்வுபநிடதார்த்தங்களை யெல்லாம் மிகத் தெளித்துணர்த்துதலாகிய வேதாந்த மார்க்கமும் இம்மார்க்கத்திற்குச் சோபான மார்க்கமேயாம்.

(இன்னும் வரும்.)

———

# முப்பொருளுறவு

இப்புத்தகம், "நியு ரிபார்மர்" பத்திராதிபர் D. கோபால செட்டியாரால் எழுதப்பட்டது. இதில் சைவ சித்தாந்தத்தின்படி, பதி, பசு, பாச உறவை நமது சாஸ்திரங்களில் இதுவரையில் கூறியிராத அநேக ஆச்சரியமான புது கோட்பாடுகளைக்கொண்டு, கரதலாமலகம்போல் தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறதுடன் அநேக நுட்பமான ஞான விஷயங்களும் அடங்கியிருக்கின்றன. இந்நூலை சைவ சித்தாந்த சிகாமணிகளாகிய திருவாளர்கள் T. பொன்னம்பலம் பிள்ளை M.R.A.S. பாளயங்கோட்டை சைவசபை காரியதரிசி, V. M. கல்லியாணசுந்தரம் பிள்ளை B.A., L.T., M. S. பூரணலிங்கம் பிள்ளை B.A., L.T., V. P. காந்தமதி நாதபிள்ளை B.A. T. இராமலிங்கபிள்ளை M.A., முதலிய அநேகரும், ஜஸ்டிஸ், சுகுணபோதினி முதலிய பத்திரிகைகளும் வியந்து பேசுகின்றனர். இதன் விலை அணா 8. வேண்டியவர்கள் அடியில் கண்டவருக்கு எழுதவும்.

D. கோபால செட்டி,

"நியு ரிபார்மர் பத்திராதிபர்" அரக்கோணம்.

---

# சருவஞானோத்தர ஆகமம்

## ஞானபாதம் தமிழ் மூலமும், முத்திரத்ந விருத்தியும்

இது ஸ்ரீகண்ட பரமேசுவரரால் ஸ்ரீ சுப்பிரமணியருக்கு உபதேசித்தருளப்பெற்றது. சைவசித்தாந்த சாரமாயுள்ளது. விருத்தியில் பல அரும்பெரும் விஷயங்கள் விளங்கும். வடமொழி மூலமும் சேர்க்கப்பெற்றிருக்கின்றது. நயம் கிளேஸ் காகிதத்தில் பக்கம் 200 வரையுள்ளது. வேண்டுவோர் நம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

விலை ரூபா 1—8—0 தபால் சார்ஜ் வேறு

ஒரு முறையில் ஐந்து புத்தகம் வாங்குவோர்க்கு ஒரு புத்தகம் சேர்த்துக் கொடுக்கப்படும்.

இங்ஙனம்:

போ. முத்தைய பிள்ளை,

சிவாகமசங்கம், தேவகோட்டை.

# திருவருள் கம்பெனி

# THIRUVARUL & Co.,

General Merchants & Booksellers, 43, Palayappen Street,
G. T. MADRAS.

---

## ஸ்ரீ தாயுமான சுவாமிகள் பாடல் மெய்கண்ட விருத்தியுரை

பல நூல்களைப் படித்து அரிதில் அறியும் வேத சிவாகமங்களின் ஞானபாதப் பொருள்களை யெல்லாம் பல பிரபல பிரமாணங்களோடு இவ்வுரையில் அறியக் கூடும். ஷை சுவாமிகள் திருவுருவப் படத்தோடு, பட்டு கலிகோ பயிண்ட் செய்தது.

விலை ரூபா 4—0—0

| | | | |
|---|---|---|---|
| பட்டினத் தடிகள் பிரபந்த விருத்தியுரை | ரூ. 3 | 8 | 0 |
| கம்ப ராமாயண வசனம் (திரு அவதார முதல் பட்டாபிடேகம் வரையில் | 3 | 0 | 0 |

| | ரூ. | அ. | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|
| வினோதரச மஞ்சரி | 2 | 0 | பகவத் கீதை பாக்கட் சயிஸ் | 1 | 0 |
| பரமபதமார்க்கம் | 0 | 8 | ஞானத்திரட்டு | 1 | 0 |
| ஜடபரதோ பாக்கியானம் | 0 | 8 | தேவி பராக்கிரமம் | 1 | 4 |
| பூலோக இன்ப துன்பம் | 0 | 6 | சங்கீத ஞானபூஷணி | 1 | 8 |
| ஹிந்துலா | 1 | 0 | சின்மய தீபிகை | 0 | 8 |
| செந்தமிழ் வானவர் சரித்திரம் | 0 | 12 | திருமுறைத் திரட்டு (காஞ்சி நாகலிங்க முதலியார் பதிப்பு | 2 | 8 |
| பிரபஞ்ச பாவபுண்ணியம் | 0 | 8 | மஹாபதிவிரதைகளின்சரித்திரம் | 0 | 8 |
| முக்தி சோபானம் | 0 | 8 | பன்னிரண்டு ராசாக்கள் கதை | 0 | 12 |
| இந்திரஜாலக் கதைகள் | 0 | 8 | சிகிச்சா ரத்தின தீபம் (வைத்திய நூல்) | 2 | 8 |
| பட்டினத்துப் பிள்ளையார் திருப்பாடற்றிரட்டு. சுவாமிகள் சரித்திரமு மடங்கியது. | 2 | 0 | கண்ணுசாமீயம் வைத்தியநூல் | 1 | 8 |

இவைகளன்றி இதர நாவல்களும், பாடசாலையில் வாசிக்கும் சிறுவர்களுக்கு வேண்டிய, தமிழ் வாசகங்கள், இலக்கணப் புத்தகங்கள், தேச சரித்திரங்கள் முதலியனவும் எம்மிடம் கிடைக்கும்.

## RINGWORM OINTMENT

இது சரீரத்தில் உண்டாகும் தேமல், சகலவிதமான படைகள், சொறி, கரப்பான் முதலியவற்றிற்கு, ஷை சரீரத்தின் பாகத்தை கார்பாலிக் சோப் தேய்த்து சுத்தஞ் செய்து ஒருமுறை பூசினவுடன் மிகவும் குணம் தரும்.

விலை புட்டி 1-க்கு 0—8—0 1 டசன் புட்டி 5—4—0

## EUCALYPTUS OIL

யூகலிப்டஸ் ஆயில் என்னும் நீலகிரித் தயிலம் புட்டி 1-க்கு 0—4—0
1 டசன் 2—8—0

தர்மா மீட்டர் என்னும் சுரம்பார்க்கும் டிக்கிரி 0—14—0 1 டசன் 9—0—0

குறிப்பு :— ஷை புத்தகங்களுக்கும், மருந்துகளுக்கும், பாக்கிங் சிலவும் தபால் சிலவும் பிரத்தியேகம்.


---


Printed at the Sadhu Press, Royapettah and Published by I. Authimoola Mudaliar, G. T. Madras.